

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.7.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய மருத்துவ சங்கம் தமிழ்நாடு கிளையின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் அடிப்படை உயிர்காக்கும் பயிற்சி (Cardio Pulmonary Resuscitation) கொடுப்பதற்காக "ஆருயிர்" – அனைவரும் உயிர் காப்போம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், இந்திய மருத்துவ சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் கே.எம். அப்துல் ஹசன், செயலாளர் டாக்டர் எஸ். கார்த்திக் பிரபு, பெண் மருத்துவர் பிரிவு செயலாளர் டாக்டர் கிருத்திகா தேவி, முன்னாள் தலைவர் டாக்டர் டி.என். ரவிசங்கர், மாநில நிதிச் செயலாளர் டாக்டர் கௌரி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இங்கிலாந்து நாடாளுமன்றத்துக்கு இதுவரை இல்லாத அளவில்

# 28 இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் தேர்வாகியுள்ளனர்!

லண்டன், ஜுலை 8 -

இங்கிலாந்து பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் ரிஷி சுனக், அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் சுவெல்லா பிரேவர்மேன், பிரீத்தி படேல், கிளாரி கௌடின்ஹோ ஆகியோர் தத்தமது தொகுதிகளில் இருந்து மீண்டும் தேர்வாகியுள்ளனர். லீசெஸ்டர் கிழக்கு தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தொழிலாளர் கட்சியின் வேட்பாளர் ராஜேஷ் அகர்வாலை வீழ்த்தி, கன்சர்வேட்டிவ் கட்சியின் ஷிவானி ராஜா வெற்றி பெற்றார்.

கன்சர்வேட்டிவ் கட்சியைவிட தொழிலாளர் கட்சி சார்பில் அதிக இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் தேர்வாகியுள்ளனர். அக்கட்சி தரப்பில் மூத்த எம்.பி. சீமா மல்ஹோத்ரா, நவேந்து மிஸ்ரா, நாடியா ஒயிட்டாம், சீக்கியஎம்.பி. க்களான பிரீத் கௌர் கில், தன்மன்ஜித் சிங் தேசி ஆகியோர் மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர். மேலும், தொழிலாளர் கட்சி சார்பில் ஜாஸ் அத்வால், பேகி சங்கர், சத்வீர் கௌர், ஹர்பிரீத் உப்பல், வாரிண்டர் ஜஸ், குரீந்தர் ஜோசன், கனிஷ்கா நாராயண், சோனியா குமார், சுரீனா பிரேகன்பிரிட்ஜ், கிரித் என்டிவைசில், ஜீவன் சந்தர், சோஜன் ஜோசஃப் உள்ளிட்டோர் முதல்முறையாக தேர்வாகியுள்ளனர்.

லிபரல் டொமாக்ரட்ஸ் கட்சி சார்பில் முனிரா வில்சன் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். சாகத் ஆதம் படேல், இக்பால் முகமது ஆகியோர் சுயேச்சையாக வென்றுள்ளனர். பிரிட்டன் பொதுத் தேர்தலில் மொத்தம் 107 இந்திய வம்சாவளி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் 28 பேர் தேர்வாகியுள்ளனர். கடந்த தேர்தலில் 15 இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் வெற்றி பெற்றிருந்தனர்.




ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து, கழக சட்டத்துறை சார்பில், சென்னையில் நேற்று முன்தினம் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றது. கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., தலைமையில் நடைபெற்ற இம்மாபெரும் உண்ணாவிரத அறப்போரை கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசினார். ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம், இந்தியக் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் இரா.முத்தரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.வில்சன், இரா.கிரிராஜன், மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மேடையில் உள்ளார்கள்.

## குற்றவியல் சட்டங்களின் பெயர் மாற்றம்

# இந்தியைத் திணிக்கும் முயற்சி!

### உண்ணாவிரதத்தைத் தொடங்கிவைத்து அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு !

சென்னை ஜுலை 8-



குற்றவியல் சட்டங்களின் பெயர் மாற்றம் என்பது இந்தியைத் திணிக்கும் முயற்சி என்று தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள 3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக, தி.மு.க. சட்டத்துறை சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்த அறப்போராட்டத்தை தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் துவக்கி வைத்தார்.

அப்போது உரையாற்றிய அவர், குற்றவியல் சட்டங்களின் பெயர் மாற்றப்பட்டிருப்பது ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு முயற்சி என்று குற்றம் சாட்டியுள்ளார். அனைத்து இடங்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

**முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றச்சாட்டு**

உண்ணாவிரத அறப்போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ப.சிதம்பரம், காலனி ஆதிக்கத்தை விட மோசமான அரசாக பா.ஜ.க. அரசு உள்ளதாக விமர்சனம் செய்தார்.

குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவதற்கு முன்னர், சட்டக் குழுவின் ஆலோசனையை கேட்காதது மிகப்பெரிய தவறு என்று தெரிவித்துள்ளார். மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை ஒன்றிய அரசு நிறுத்தி வைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## சாதி – மத பாகுபாடுகள் இல்லாமல்

# அனைத்து மக்களையும் நேசிக்கக் கூடியவர்களாக இருப்போம்!

### தூத்துக்குடியில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, ஜுலை 8-

நாம் சாதி, மத பாகுபாடுகளில் இருந்து வெளியே வந்து அனைத்து மக்களையும் நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் கீழ வல்லநாட்டில் உள்ள தூத்துக்குடி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தலைமையில் நேற்று முன்தினம் (06.07.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து மாணவ - மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் கனிமொழி கருணாநிதி மாணவர்களிடம் தெரிவித்ததாவது:-

உங்களுக்கு எந்தத் துறை பிடித்திருக்கிறதோ அந்தத் துறையை தேர்ந்தெடுங்கள். அந்த துறைதான் உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களோடு வரப்போகிறது. பிடித்த துறையில்தான் நமக்குப் பிடித்த விஷயத்தை மகிழ்ச்சியோடு செய்ய முடியும். மற்றவர்களை பார்த்து துறையை தேர்ந்தெடுத்தால் மகிழ்ச்சி இருக்காது. அறிவே ஆற்றல் ஆகும்.

உலகத்தில் நிறைய அழகான விஷயங்கள் உள்ளன. அவை அத்தனையையும் உணரக்கூடிய மனிதர்கள்தான் முழுமை பெற்ற மனிதர்கள். நாம் இந்த உலகத்தை பாதுகாக்கக்கூடிய வர்களாக, சாதி, மத பாகுபாடுகளில் இருந்து வெளியே வந்து அனைத்து மக்களையும் நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.



மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தெரிவித்ததாவது:

மாதிரிப்பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு உயர் கல்விக்குச் செல்ல வேண்டும் அடுத்த என்ன படிக்க வேண்டும் என்று சிந்திக்க வைக்க வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும் என்றுதான் இங்கு அதிகாரிகள் வந்துள்ளனர். அடுத்து என்ன படிக்க வேண்டும் என்பதை இப்போது இருந்தே யோசிக்க வேண்டும். படிப்பு, விளையாட்டு என அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்க முயற்சி எடுக்க வேண்டும். நீங்கள் படிப்பதை மனப்பாடம் செய்யாமல் புரிந்து படிக்க வேண்டும்.

நமது எதிர்காலத்தில் சாதிப்பதற்கான திறமை கிடைக்கும். நூலகம் சென்று படிக்கும் போது எழுதும் திறமை வரும். பேசும், எழுதும் திறமையை வளர்க்க நூலகம் செல்ல வேண்டும். இங்குள்ள அத்தனை வசதியையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிடித்த பாடத்தை படிக்க வேண்டும். எதிர்காலத்தில் சாதனையாளர்களாக வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கனிமொழி கருணாநிதி அவர்கள் புதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலை யத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான புதிய அல்ட்ராசோனோகிராம் சேவை யினை துவக்கி வைத்தார். பின்னர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ், வைட்டமின் மாத்திரைகள், ஓ.ஆர்.எஸ். கரைசல் ஆகியவற்றை வழங்கினார்.

முன்னதாக இந்தியாவில் முதல் இடத்தை பிடித்த மூக்குப்பீறி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட சான்றிதழை கனிமொழி கருணாநிதி அவர்கள் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பொற்செல்வனிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். லோக.பாலாஜி சரவணன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. ரெஜினி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் அவர்களை மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. சந்தித்து நீதித்துறை சீர்திருத்தங்கள் குறித்து மனுவினை அளித்தார்.




விக்கிரவாண்டி சட்டமன்ற விழுப்புரம் தெற்கு மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் சட்டமன்றத் தொகுதி தலைமைத் தேர்தல் பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வி துறை அமைச்சர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள். மண்டலச் செயலாளர் அ.தமிழ்மாறன் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப.அன்பரசு ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், தகவல் தொழில்நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி.லெனின், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் ஆ.கா. தருண், இசை சிவா, பாலா, பத்மபிரியா, மண்டல பொறுப்பாளர் .ஸ்ரீதர், காஞ்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரவி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் சாம்பசிவம், பாலாஜி , கிருஷ்ணராஜ், சசிரேகா, பிரபு, இராம சரவணன், தொகுதி அமைப்பாளர்கள் ரகுபதி, கதிரவன், தேவா, நாராயணமூர்த்தி, விஜயகுமார், குரு இராமலிங்கம், வீர மணிகண்டன், மகாலட்சுமி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர். கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்ரவாண்டி தெற்கு ஒன்றியம் முட்டத்தூரில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் வீடுர்ரவி, மாவட்டப் பிரதிநிதி பிரகாஷ் உள்ளிப்ப நிர்வாகிகள் உள்ளனர்.